## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து

# அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி ஆதரவு!

### ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி – தமிழ் மாநில தேசிய லீக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன!





சென்னை, ஏப். 11 –

முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.4.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், வன்னியர் கூட்டமைப்பின் தலைவரும் அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் நிறுவனத் தலைவருமான சி.என்.இராமமூர்த்தி அவர்களும் துணைத் தலைவர் கே.வெங்கடேசன், பொதுச் செயலாளர் ஜோசப்ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார்.

### ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவு!

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.4.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி ஜெ.குரு அவர்களின் மகள் குரு. விருதாம்பிகை மற்றும் குரு. விருதாம்பிகையின் கணவரும் ஜெ.குரு அவர்களின் மருமகனுமான காடுவெட்டி மனோஜ், பொருளாளர் ஆர்.பாலமுருகன், இணைச் செயலாளர் குடியாத்தம் பிரேம்குமார் ஆகியோர் நேரில் சந்தித்து, "ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி" நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.



### 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி ஆதரவு!

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.4.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகளான மாநில அமைப்புச் செயலாளர் சம்சுதீன், சென்னை மாவட்டச் செயலாளர் கே.அல்லாபகஷ், தென்சென்னை மாவட்டச் செயலாளர் திருவான்மியூர் எம்.ஹாஜா, இளைஞர் அணிச் செயலாளர் திருவான்மியூர் ரிஸ்வான் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு பிரச்சாரம் செய்வதோடு, அவர்களின் வெற்றிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்வுகளில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## திருவாரூர் – மன்னார்குடி தொகுதிகளில்

# பூண்டி கலைவாணன் - டி.ஆர்.பி.ராஜா தீவிர வாக்கு சேகரிப்பு!

### மக்கள் திரண்டு அமோக ஆதரவு!

திருவாரூர், ஏப். 11 –

2026 சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முடிவடைந்து, பிரச்சாரம் துவங்கிய நிலையில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது பிரச்சார பயணங்களை தீவிரப்படுத்தி உள்ளனர்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு கழக தலைவர் – மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கழகத்தின் சார்பில் போட்டியிடும் பூண்டி கே.கலைவாணன், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு தீவிர தேர்தல் பிரச்சார பயணத்தில் ஈடுபட்டனர்.

திருவாரூர், கொரடாச்சேரி ஒன்றிய பகுதிகளில் தனது தீவிர பிரச்சார பயணத்தில் ஈடுபட்ட பூண்டி கே.கலைவாணன் மன்னார்குடி, நீடாமங்கலம் ஒன்றிய பகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட முனைவர் டி.ஆர்.பி.ராஜா செல்லுகின்ற வழியெங்கும் பெருமளவில் மக்கள் கூட்டம் திரண்டு நின்று வரவேற்பு அளித்து வருகின்றனர்.

வேட்பாளர்களுக்கு கிராமிய முறைப்படி பூரணகும்ப வரவேற்பும், ஆரத்தி எடுத்து வாழ்த்துக்களையும் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி 2026லும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய தலைமையில் தொடரும் என்கின்ற உத்தரவாதத்தை அளிக்கும் விதமாக வேட்பாளர்களை வாழ்த்தி வருகின்றனர்.

பிரச்சாரத்தில் ஈடுபடும் கழக வேட்பாளர்கள் கழகத்தின் சார்பில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டும் திருவாரூர் மற்றும் மன்னார்குடி பகுதிகளில் கழகத்தின் சார்பில் செய்து முடிக்கப்பட்ட பணிகளையும் பட்டியலிட்டும் வாக்குகளை சேகரித்தனர்.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஆட்சி 2026லும் ஏன் தொடர வேண்டும், தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் சூழ்ந்துள்ள மதவாத சக்திகளின் வெறியாட்டம் நிறைவு பெறவும், நம் வருங்கால சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஆட்சி தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த பிரச்சாரத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்று இருக்கின்ற கட்சிகளின் நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் பல்வேறு சமூக அமைப்புகளும் பொதுமக்களும் திரண்டு வந்து ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியம், ஏரல் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் ரா. பெரியசாமி கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 9.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 9.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (8வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| விக்கிரவாண்டி, மதுராந்தகம் | – புதுச்சேரி ஆர்.சிவா |
| நாங்குநேரி | – எஸ்.முத்துலட்சுமி, முன்னாள் எம்.எல்.ஏ., |
| நாகப்பட்டினம் | – ஜெயப்பிரகாஷ் |
| பூம்புகார் | – ஏ.எம்.எச். நாசிம் |
| மொடக்குறிச்சி | – கே.ஈ. பிரகாஷ் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 09.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு!

நாமக்கல் மேற்கு மாவட்டம், கபிலர்மலை மத்திய ஒன்றியத்தை சேர்ந்த கே.கே.சண்முகம், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம் "**
சென்னை 600 018.
நாள் : 09.04.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---





கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், கழக வெற்றி வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பெரிய கடை வீதி பகுதி கழகத்திற்குட்பட்ட ராஜ வீதி, கே.ஜி. தெரு உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் மாநகர் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதிப் பொறுப்பாளர்கள் மார்க்கெட் மனோகரன், டெம்போ சிவா, மு.ரா.செல்வராஜ் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.